# SCHOOL DROPOUT AND IMPACTS: RESEARCH BASED ON THE BOLLIVORIAN VILLAGE IN SAINTHAMARUTHU DIVISIONAL SECRETARIAT DIVISION

**L.T. Mohammed Iyas**
Department of Philosophy, University of Peradeniya, SriLanka

**Abstract:** School dropout is an issue threatening the world today. With the growing number of school dropouts in countries like the developing world of Sri Lanka, it has created fears that it will ruin the country's prosperity and the future of the children. In this regard, it is possible to observe that the school dropout has been taking place in recent times in the Bolivorian village of Sainthamaruthu Divisional Secretariat. There are lot of resons for school dropout in this area such as Parents' illiteracy, carelessness of teachers, parental abroad, lack of income, divorce, sending children to job, lack of school equipments. Children are educationally, psychologically and socially influenced by school dropouts. Their impacts have affected many of the children's educational activities, psychosocial development and personality development. In this way, it is aimed to identifying the factors of school dropouts, identifying solutions and providing recommendations for reducing school dropoutss in the future. I have used a sample method to collect information in this research. For this purpose, 30 students, their families and 10 teachers from the school were taken for research in the Divisional Secretariat Division. The information was obtained from the teachers for the status of the students' education level. Furthermore, students' progress reports were also used for research. Secondary were books, magazines, articles, magazines, internet and electronic media. As a result of this, the education sector of the region is heavily affected due to the increase in school dropouts in recent years in Bollivarian village at Sainthamaruthu Divisional Secretariat Division. Therefore, the study examines the causes of the school interventions in the area and makes it clear to the public about the steps to be taken to diagnose and reduce the solutions.

**Key words:** School Dropout, Psychological Problems, Behavioral Problems, Personality Development, and Educational Activities

## அறிமுகம்

மனிதர்களின் சிறந்த வாழ்கைக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. இக் கல்வியின் முக்கித்துவத்தினை உணர்ந்து உலகிலுள்ள நாடுகள் இதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றன. இலங்கையில் எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாமல் செய்யும் பொருட்டு யாவருக்கும் எல்லா மட்டங்களிலும் கல்வியைப் பெறுவதற்குரிய சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என நாட்டின் அரசியலமைப்பில் 27 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளதோடு மாத்திரமன்றி சிறுவர் உரிமை சாசனத்தின் உறுப்புரை 28 இல் ‘எல்லாப் பிள்ளைகளும் கல்வி கற்கும் உரிமையுடையவர்களாவர். அரசு ஆரம்பக் கல்வியேனும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைப்பதை உறுதி செய்தல் வேண்டும்’ எனவும் கூறப்பட்டுள்ளமையானது கல்வியின் அவசியத்தை உணர்த்துகின்றது.

இலங்கையில் மொத்தமாக 10590 பாடசாலைகள் உள்ளன. இதில் 20.3 சதவீதம் உயர் தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாகும். மொத்த பாடசாலையில் 40 சதவீதம் 1 முதல் 5 வகுப்புவரையிலானது. இதில் ஏறத்தாழ மூன்றில் ஒரு மாணவர்கள் கற்கின்றனர். இலங்கையில் மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 180,000 ஆகும் (School Census: 2017). 2017 இல் இலங்கையில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 42 இலட்சமாகும். இதை விட அண்ணளவாக 7 இலட்சம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாதவர்கள். பாடசாலை செல்வோரில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை 19 லட்சம் மாணவர்கள் கற்கின்றனர். 6 முதல் 11 வரை 21 இலட்சமும், 12 முதல் 13 வரை 2 லட்சம் மாணவர்களே கல்வியை தொடர்கின்றனர் (School Census: 2017).

ஐ.நா சிறுவர் உரிமைகள் சாசனம் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என்றும் உறுப்புரை 28 மற்றும் 29 என்பன சிறுவர்களின் கல்வி உரிமையையும் வலியுறுத்துகின்றது. இலங்கை அரசு 5 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்கிறது. சிறுவர் உரிமைகள் சமவயத்தின் சரத்து 32 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தம் ஆரோக்கியம், கல்வி வளர்ச்சி என்பனவற்றின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாய் அமையக்கூடிய வேலைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைக்குண்டு என்கிறது (Janodaya sajeewana kendraya: 2003).

இன்று பாடசாலைகளை விட்டு இடைவிலகுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பல்வேறுப்பட்ட அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கின்ற போதிலும் சில காரணங்களினால் மாணவர்கள் இடைவிலகலானது இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

‘பாடசாலை இடைவிலகல்’ என்பது ‘ஒரு பிள்ளை பாடசாலைக்குச் சேர்ந்து தான் கற்க வேண்டிய கல்வியை கற்காது இடையில் விட்டுவிடுவதைக்’ குறிக்கும். பாடசாலைக்கு விட்டுவிட்டுச் செல்வது, பாடசாலைக்கு செல்லாமல் இருப்பது, பாடசாலைக்கு சென்று இடையில் கல்வியை நிறுத்துவது போன்றன இடைவிலகளைக் குறிக்கும் (Baldwin, B., & Moffett, R., Lane, K. (1992).

ஒரு பிள்ளை பாடசாலை விட்டு இடைவிலகும் போது அனைவரதும் கவனம் அப்பிள்ளையில் இருக்க வேண்டும். பாடசாலை இடைவிலகல் என்பது எமது நாட்டின் பொருளாதார, சமூக ரீதியான மற்றும் அரசியல் ரீதியிலான மாற்றங்களை உண்டுபண்ணக்கூடியது (Dianda, 2008).

இந்த வகையில், ஆய்வுப் பிரதேசமான சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமசேவகர் பிரிவில் அண்மைக்காலமாக பாடசாலை

இடைவிலகல்களால் தினமும் மாணவர்கள் ஆசிரியர்களும், பெற்றோர்களும் பிரச்சினைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் பாடசாலை இடைவிலகல்களைத் தடுக்கும் வழிமுறைகளும், சட்டதிட்டங்களும், தண்டனைகளும் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் பாடசாலை இடைவிலகல்கள் இப்பகுதியில் தினமும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

பாடசாலை இடைவிலகல்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்களாவர். பாடசாலை ஆசிரியர்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் முக்கிய பொறுப்புள்ளது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வயதுப் பிரிவுக்கேற்ற வகையில் கல்வியின் அவசியம் போதிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் பங்களிப்பு வழங்க வேண்டியது மிக அவசியமாகும்.

மாணவர் இடைவிலகல்களால் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. இப்பிரதேசத்தில் இது போன்ற பிரச்சினைகள் நடப்பதைத் தடுப்பதற்காகவே சிறுவர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் குறிப்பாக, பாடசாலை இடைவிலகல்கள் அறிந்தவர்கள் இது தொடர்பாக உடனடியாக இலவச தொலை பேசி அழைப்பின் மூலம் (1929) சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் முறைப்பாடு செய்வதின் மூலம் குறிப்பிட்ட குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அப்பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர், பிரதேசத்தின் கண்காணிப்புக் குழு, பொலிஸ் நிலையம், பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**இலக்கிய மீளாய்வு**

United Nations Education Scientific and Organization (UNESCO) நிறுவனத்தின் இணையத்தளமான www.unesco.org இல் பல ஆய்வுகள் கட்டுரைகள் காணப்படுகின்றன. இதில் உகண்டாவில் 2001/30/July தொடக்கம் 3 Augest வரை நடந்த சர்வதேச பயிற்சிப்பட்டறையில் ஆய்வை www.unesco. org/education/poverty/news.shtm என்ற இணையத்தள முகவரியின் ஊடாக பெறப்பட்ட "International Workshop On Education and Poverty eradion Kampala" என்ற கட்டுரையில் தன்சானியா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி Julius Nyerere என்பவர் கல்வியும் வறுமையும் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "Education is not a way to escape Poverty Is is a way Or fighting it" இதன் படி கல்வி என்பது வறுமையை ஒழிப்பதற்கான உரிய வழி இருக்கவில்லை. அது போராட்டத்துக்குரிய வழியாக இருக்கின்றது என்கின்றார். எனவே இந்த ஆய்வானது கல்வியினூடாக வறுமையை ஒழிப்பதற்கு கூட்டுறவும் ஏனைய சமூகக் காரணிகளும் அவசியம் என்பதை வழியுறுத்துகின்றது. அத்துடன் வறிய மாணவர்களுக்கும் உண்மையான சந்தர்ப்பத்தையும் கொடுக்கக்கூடிய கல்வி முறையை அமுல்படுத்தவேண்டும் என்கிறது. மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் குடும்ப பொருளாதார சூழல்கள் - யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு" என்ற ஆய்வில் மாணவர் இடைவிலகல் நிலைக்கும் பெற்றோரின் வருமான மட்டத்திற்கும் இடையே நெருக்கமான நேர்க்கணிய தொடர்பு உள்ளது எனவும் அத்துடன் மாணவர் இடைவிலகல் நிலைக்கும் தந்தையின் கல்வி மட்டத்திற்கும் இடையே நெருக்கமான எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது எனவும் மாணவர்

இடைவிலகல் நிலைக்கும் தாயின் கல்வி மட்டத்திற்கும் இடையே நெருக்கமான எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது. அதே நேரம் தந்தையினது கல்வி மட்டத்தினை விட தாயினது கல்வி மட்டத்திற்கும் மாணவர் இடைவிலகலுக்கும் இடையே அதிகளவான எதிர்கணிய தொடர்பு உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (Uthayakumar, 2011). எனினும் அம்பாரை மாவட்டத்தில் நிலவும் பாடசாலை இடைவிலகல்கள் தொடர்பாக இடம்பெற்ற ஆய்வானது மிகவும் குறைவு. இந்த ஆய்வு இடைவெளியை நிறப்ப வேண்டும் எனும் நோக்கில் அம்பாரை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது பிரசேத்தின் வொலிவேரியன் கிராமத்தில் மாணவர் இடைவிலகல் தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதனூடாக ஆய்வு இடைவெளி நிவர்த்தி செய்யப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

சாய்ந்தமருது வொலிவோரியன் பிரதேசத்தில் அதிகமான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்ற நிலைமை காணப்படுகின்றது. பல்வேறு காரணங்களால் பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றார்கள். இப்பிரதேசத்தில் மாணவர் இடைவிலகல் என்பது முக்கிய ஒரு ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது. அண்மைக்காலமாக ஏன் சாய்ந்தமருதுப் பிரதேச செயலக வொலிவேரியன் கிராம சேவகர் பிரிவில் பாடசாலை இடைவிலகலானது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது? என்பது பற்றிய ஆய்வுப் பிரச்சினையோடு இவ்வாய்வு தொடங்குகிறது.

**ஆய்வின் நோக்கம்**

பிரதான நோக்கம்

- ✓ இப்பிரதேசத்தில் பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கு மீளிணைத்தல்.

துணை நோக்கங்கள்

- பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களைக் கண்டறிதல்
- கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை அதிகரித்தல்
- மாணவர்களை மீளிணைப்பதற்கான உதவிகளைச் செய்தல்
- சிறுவர் தொழிலாளிகளைக் குறைத்தல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் தகவல்களைச் சேகரிப்பதற்காக மாதிரி முறையைப் பயன்படுத்தியுள்ளேன். இதற்காக வொலிவேரியன் பிரதேச செயலகப் பிரிவில் பாடசாலையிலிருந்து இடைவிலகிய 30 மாணவர்களும் அவர்களின் குடும்பங்களும் மற்றும் 10 ஆசிரியர்களும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டனர். ஆசிரியர்களிடமிருந்து மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தின் நிலையை அறிந்து கொள்வதற்காக ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு வினாக்கொத்துப் படிவமும் தயாரிக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. மேலும் மாணவர்களின் வரவுப் புத்தகம், முன்னேற்ற அறிக்கைகள் என்பனவும் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், சிறுவர் பாதுகாப்புச் செயற்பாட்டில் ஈடுபடும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்து பேட்டி முறை மூலமும் இதற்கான தரவுகளையும், விபரங்களையும் பெற எத்தனித்துள்ளேன்.

இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சர்வதேச நிறுவனங்கள், மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட

ஆய்வறிக்கைகள், முன்மொழிவுகள், பல்வேறுப்பட்ட நூல்கள், இணையதளம் போன்றவற்றிலிருந்து தேவையான தகவல்கள் ஆய்வாளரினால் திரட்டப்பட்டது. அத்துடன் பிரதேச செயலகம், வலயகல்வி அலுவலகம், பாடசாலைகள் போன்றவற்றிலிருந்தும் கிராம சேவகர்களின் அறிக்கைகளிலிருந்தும் தகவல் பெறப்பட்டது.

**தரவுகளின் பகுப்பாய்வு**

- மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியமைக்கான காரணங்கள் இதில் ஆராயப்பட்டுள்ளன.


- ஆய்வுப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 இடைவிலகிய மாணவர்களும், அவர்களது பெற்றோரும் மற்றும் 10 ஆசிரியர்களிடமுமிருந்து பாடசாலை இடைவிலகல்களை தூண்டிய காரணிகள் தொடர்பான தகவல்கள் இவ்வாய்வுக்காகப் பெறப்பட்டன.

- இப்பிரதேசத்தில் பாடசாலை இடைவிலகல்களை தூண்டிய பிரதான காரணங்களாக வறுமையும், பொருளாதாரப் பிரச்சினைகளும், தாய், தந்தையர்களின் பிரிவு, பெற்றோர் வெளிநாடு செல்லல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வரைபடம் - 01

*Table 1: Number of Questioned Groups*

| Group | School children | Teachers | Parents |
|---|---|---|---|
| **Male** | 18 | 04 | 10 |
| **Female** | 12 | 06 | 20 |
| **Age** | 10-14y | 34-52y | 30-50Y |





இவ்வாய்வில் 30 பாடசாலை மாணவர்களும், 10 ஆசிரியர்களும், 30 பெற்றோரும் கலந்து கொண்டனர். மாணவர்களில் 12 பெண் பிள்ளைகளும், 18 ஆண் பிள்ளைகளும் கலந்து கொண்டனர். இதில் அனைவரும் 10-14 வயதுக்குட்பட்டவர்கள். இவ்வாய்வுக்கு கலந்து கொண்ட ஆசிரியர்களில் 06 பேர் ஆண்களும் 04 பேர் பெண்களுமாவர். இவர்கள் அனைவரும் 34-52 வயதுக்குட்பட்டவர்களாவர். மேலும் இவ்வாய்வுக்காக கலந்து கொண்ட பெற்றோர்களில் 20 பெண்களும் 10 ஆண்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் 30-50 வயதுக்குட்பட்டவர்களாவர்.

வரைபடம் - 02

*Table 2: Education Levels of Parents*

| Gender | Grade 03 | Grade 04 | Grade 05 | Grade 06 | Grade 07 | Grade 08 |
|---|---|---|---|---|---|---|
| Male | 04 | 02 | 03 | 02 | 01 | 01 |
| Female | 03 | 04 | 04 | 03 | 01 | 02 |




மேலுள்ள உருவானது ஆய்வுப் பிரதேசத்தில் இடைவிலகிய மாணவர்களது தாய் தந்தையரின் கல்வி நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

**ஆய்வுப் பெறுபேறுகளும், முடிவுகளும்**


இவ்வாய்வின் மூலம் சாய்ந்தமருது பிரதேசத்தின் பொலிவேரியன் கிராமத்தில் இடம்பெறும் பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் இடைவிலகிய மாணவர்களிடமிருந்தும், அவர்களின் பெற்றோர்களிடமிருந்தும், பாடசாலையின் வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர்களிடமிருந்தும் பெறப்பட்டன. மேலும், பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், பாடசாலை ஒழுக்காற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்களிடம் கொடுக்கப்பட்ட வினாக் கொத்தின் மூலமாகவும், பிள்ளைகளின் வருகைப் படிவம் மற்றும் புள்ளிகளின் பதிவுப் புத்தகம் போன்றவற்றின் மூலமாகவும் மாணவர்களின் கல்விசார் மதிப்பீடுகள் இடம்பெற்றன.

வரைபடம் - 03

*Table 3: Number of Students' Reasons for Dropout*

| Gender | Poverty | Low Education of the parents | Unemployed | Disease | Divorce of parents | parents forign | Drugs |
|---|---|---|---|---|---|---|---|
| Boys | 03 | 02 | 03 | 02 | 02 | 02 | 02 |
| Girls | 03 | 02 | 01 | 02 | 03 | 02 | 01 |




வரைபடம் - 04

*Table 4: Number of Students' Academic & Behavioral Progress*

| Title | Poor | Below Average | Average | Good |
|---|---|---|---|---|
| Academic Performance | 18 | 08 | 4 | - |
| School Attendance | 30 | - | - | - |
| Class Participation | 22 | 08 | - | - |
| Discipline | 15 | 05 | 7 | 3 |
| Behavior Patterns | 10 | 16 | 4 | - |

இதில் 18 பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் குறைவான சராசரி நிலையில் காணப்பட்டனர். 30 மாணவர்கள் பாடசாலை வருகையில் குறைவான மட்டத்திலும், 22 மாணவர்கள் வகுப்பறை பாடப் பங்குபற்றலில் குறைவான சராசரி கொண்டவர்களாகவும், 15 மாணவர்கள் ஒழுக்க விடயங்களில் குறைவு உடையவர்களாகவும், 10 மாணவர்கள் நடத்தைசார் பிரச்சினைகள் கொண்டவர்களாகவும், பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளே இதன் தாக்கங்களுக்கு அதிகமாக உட்பட்டிருந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

இப்பகுதியில் காணப்பட்ட பாடசாலை இடைவிலகல்களைப் பார்க்கும் போது இங்கு ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் இரு பாலாரும் பாதிப்படைந்துள்ளனர். இப்பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் பாடசாலை இடைவிலகலானது அதிகரித்துக் காணப்பட்டுள்ளன. இதற்கான காரணங்களாக பொருளாதாரக் கஸ்டம் காரணமாக தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருத்தல், ஏதாவதொரு தொழிலுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருத்தல், பெற்றோர்களின் தொழிலுக்கு உதவ வேண்டியிருத்தல், நோயுற்றிருத்தல் (உடல், உள ரீதியாக), பிள்ளைகளுக்கு பாடசாலை மீது வெறுப்பு ஏற்படல், சில வேளைகளில் பாடங்களிலோ அல்லது ஆசிரியர் மீதோ வெறுப்படைந்து பாடசாலையை விட்டு வெளியேறல், ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கை காரணமாக பாடசாலையிலிருந்து வெளியேறல், சமவயதுப் பிரிவினரிடையே உள்ள செல்வாக்கு காரணமாக கல்வி மீது வெறுப்படைதல், இளம் வயதில் திருமணம் செய்தல், அதிபர்,ஆசிரியர்களின் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகம், பாடசாலைகளின் இறுக்கமான நிர்வாகம், சூழலின் தாக்கம், வெளிநாட்டு மோகம், சிறு குழந்தைகளைப் பராமரித்தல், பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை, பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பு குறைவாகக் காணப்படல், முன்பள்ளிக் கல்வி குறைவாகவும் ஒழுங்கான முறையிலும் இல்லாமை, ஆசிரியர் வளப்பற்றாக்குறை போன்றவற்றால் மாணவர்கள் கல்வியை தொடர்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

மேலும் பாரபட்சம் காட்டுதல், அளவுக்கதிமாக தண்டனை வழங்குதல், தாழ்வுச் சிக்கல், ஒத்துணர்வின்மை ஆசிரியரின் சிறப்புக் கவனம் தேவைப்படுபவர்களை

கவனிக்காதுவிடல், அவரின் கற்பித்தற் செயற்பாடு முன்வரிசைக்காரரை மையப்படுத்தியதாகக் காணப்படுதல், மாணவருக்கு சோர்வு ஏற்படும் வகையில் கற்பித்தல், வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் பாட விடயங்களுக்கும் மாத்திரம் முக்கியமளித்தல், வினைத்திறனற்ற முகாமைத்துவம் என்பனவும் மாணவர்களை இடைவிலகச் செய்துவிடும். மேலும் இலங்கைப் பாடசாலைகளின் முக்கிய அம்சமே பரீட்சை முறையாகும். இதனால் மாணவரிடையே பரீட்சைக்குத் தயாராதலே கல்வியின் முக்கிய எண்ணம் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கற்றலில் ஆர்வமுடையோருக்கும் நெட்டுருப்பண்ணக் கூடியோருக்கும் கரைசேர்ந்துவிடலாம் என்றதொரு தைரியத்தை இப்பரீட்சைகள் வழங்குகின்றன. இம்முறையை வெறுக்கும் மாணவர்கள் இடைவிலகி விடுகின்றனர். சகல பெற்றோர்களும் தமது பிள்ளைகள் சிறப்புச் சித்தி அடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். தமது இயலாமையை உணர்ந்த மாணவர்கள் பரீட்சைக்கு பயந்து இடைநடுவே விலகும் போக்கும் காணப்படுகிறது. அதிகமான மாணவர்கள் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்கும் நோக்கில் இடைவிலகுகின்றனர்.

பாடசாலை இடைவிலகலின் காரணமாக மாணவர்களின் கல்வி சீர்குலைதல், சிறுவர் தொழிலாளிகள் அதிகரித்தல், அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி பெருமளவு பாதிப்படைதல், சமூகத்தால் இழிவுபடுத்தப்படல், குற்றவாளியாக முத்திரை குத்தப்படல், முறையற்ற அல்லது தவறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடப் பழகுதல், போதைப் பொருள் பாவனை, உளப் பிரச்சினைகளுக்குள்ளாதல், பிள்ளை பெரியவனான பின்னர் நடத்தைப் பிறழ்வான செயல்களில் ஈடுபடல், சமூகம் தொடர்பான பயமும், தாழ்வு மனப்பான்மையும் ஏற்படல், சம வயது குழுக்களில் இருந்து வயதிற்கு மேற்பட்ட குழுக்களிடம் உறவு வைத்தல்,குடும்பப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

பாடசாலை இடைவிலகல்களைத் தவிர்த்து முன்னேற்றமடையச் செய்யக்கூடிய ஆதரவுச் சேவைகள் இன்று பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கக்கூடியதாக உள்ளன. இதற்காக பொலிஸ், பிரதேச செயலகம், கல்வித் தினைக்களம் மற்றும் பிரதேசவாசிகள் என பல்வேறு விதங்களில் உதவுகின்றனர். பாடசாலை இடைவிலகல்களை ஆராய்வதற்கும், முகாமை செய்வதற்குமான நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மையாலும் மென்மேலும் பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துச் செல்லும் நலையே உள்ளன.

## முடிவுரை

பாடசாலை இடைவிலகள் என்பது ஒரு முக்கியமான கல்வி மற்றும் சமூகப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இப்பிரச்சினை தொடர்பாக கல்வியாளர்களும், சட்ட வகுப்பாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் பல்வேறு விதங்களில் அக்கரை செலுத்தி வருகின்றனர். பாடசாலைக் கல்வியை முடிப்பதற்கு முன்பே பாடசாலையை விட்டு வெளியாகுவது ஒரு தனிநபரின் வாழ்க்கையில் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பல்வேறு தாக்கங்களை உண்டு பண்ணுகிறது. எனவே இந்த ஆய்வின் மூலமாக மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஊடாக பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை எதிர்காலத்தில் இல்லாமல் செய்வதன் மூலம் ஒரு ஆரோக்கியமான கல்விச் சூழலை உருவாக்க முனைகிறது. இவ்வாய்வுக்காக தரமான ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. இடைவிலகுகின்ற மாணவர்களின் நலன் கருதி கூடுதலான வரை எம்மாலான முயற்சிகளை எடுப்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

## பரிந்துரைகள்

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சந்ததியினரின் அறிவுசார் வளர்ச்சியிலும், ஆளுமையின் மீதும் தங்கிருக்கின்றது. இதனால், குழந்தைகளின் வளர்ச்சியும், அவர்களது சுதந்திரமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தவகையில், பாடசாலை இடைவிலகலுக்கான முற்தடுப்பானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதனை பாடசாலை இடைவிலகல் நிகழ்வதற்குச் சாதகமான நிலமைகளை நீக்குவதன் மூலம் அடைய முடியும். மேலும், பாடசாலை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அவர்களையும் ஏனைய சாதாரண மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி சமூகத்தில் பயனுள்ள பிரஜைகளாக ஆக்க முடியும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் சிறுவர்கள் பாடசாலை இடைவிலகல்களை தடுப்பதற்கும், மீளிணைத்து உதவுவதற்குமான பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

1. பெற்றோர்கள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவத்தை வழியுறுத்தல்

2. சிறுவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை விழிப்புணர்வூட்டல்.

3. பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனவந்தவர்களின் உதவிகளைப் பெறல்.

4. பாடசாலை இடைவிலகல்களை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கும், அதற்கு எதிராக செயற்படுவதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மனவடுக்களைக் குறைப்பதற்குமான பயிற்சிகளையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் நடாத்தல் வேண்டும்.

5. பாடசாலைவிட்டு இடைவிலகிய மாணவர்களை மதிப்பீடு செய்ய உளவளத்துணையாளரின் உதவியை நாடல் வேண்டும். இதன் மூலம் ஏதேனும் உளப்பாதிப்புக்குள்ளானால் அவர்கள் உடனே அதற்கான சிகிச்சைகளைப் பெறுதல் வேண்டும். இது மேலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை விட்டும் தடுக்கும்.

6. பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை இணங்கண்டு அவர்களைப் பற்றிய விபரங்களை பிரதேச செயலகத்திற்கோ அல்லது கிராம சேவகருக்கோ அறிவிப்பதற்கு அறிவூட்டல்.

7. தண்டனைகள் மிக மிகக் கடுமையாக்கப்பட வேண்டும். குற்றங்கள் களைவதற்கு முதலில் வீட்டிலிருந்தே நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும். நாட்டில் அதிகரித்து வரும் பாடசாலை இடைவிலகல்கள், சிறுவர் தொழிலாழிகள் போன்ற சம்பவங்களைத் தடுக்க வேண்டுமானால் பொது மக்கள், பொலிஸ், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒரே கோட்டில் பயணிக்க வேண்டும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியம்.

8. பாடசாலை மருத்துவப் பரிசோதனை சகல பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதனால் நோய்கள் மற்றும் குறைபாடுகள் கண்டறியப்பட்டு விசேட சிகிச்சைக்கான ஏற்பாடுகள் நேரத்துடன் மேற்கொள்ளப்படலாம்.

9. தேசிய கல்வி ஆணைக்குழு குறைபாடுகள் கொண்ட பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாக ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும் அத்துடன் இக் கொள்கை தொடர்பில் கல்வி அமைச்சானது மாகாண வலய அலுவலகர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் குறிப்பாக இக் கொள்கையை விளைதிறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வளப்பகிர்வு குறித்த விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

10. கல்வி அமைச்சும் மாகாணக்கல்வி அமைச்சுகளும் பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகளை ஸ்தாபிக்க வேண்டும். இவை கடுமையாகப் பாதிப்படைந்த

பிள்ளைகளுக்கு உதவுவதுடன் அவ்வலகுகளுக்குத் தேவையான ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கலாம்.

11. குறைபாடு தொடர்பாகக் காணப்படுகின்ற எதிர்மறைமனப்பாங்குகளை களைவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

12. ஆபத்து நிறைந்த பிள்ளை உழைப்பைத் தடை செய்யக்கூடிய வகையில் தொழிற் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

13. பாடசாலைகளில் உடல் தண்டனையைத் தடை செய்தல் தொடர்பான சுற்றறிக்கை உறுதியாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். இதன் அமுலாக்கத்தை அதிகாரிகள் கண்காணிப்பதுடன் அது மீறப்படும் சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வகுப்பறைகளில் கட்டொழுங்கு பேணப்படுவதற்கு ஏதுவாக மாற்று வழிகளும் உடன்பாடான அணுகுமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

14. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும், கல்வியமைச்சும் இணைந்து முன்னெடுத்துச்செல்லும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை பலப்படுத்துவதன் மூலம் பாடசாலை இடைவிலகலை தடுக்க முடியும்.

பாடசாலை இடைவிலகலை தடுக்க வேண்டுமாயின் இப் பணிகள் சமூகப் பணியாகக் கருதப்பட்டு சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் இவை தொடர்பில் விழிப்புணர்வு பெறுவதுடன் பாடசாலை இடைவிலகலை தடுப்பதைத் தமது பொறுப்பாகவும் உணர வேண்டும். இவ்வாறாக சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மேற்கூறப்பட்ட சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் அவசியத்தை இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது.

**உசாத்துணைகள்**


1. Baldwin, B., & Moffett, R., Lane, K. (1992). *The high school dropout: Andecedents, social consequences and alternatives.* journal of school leadership.

2. Curtis, S. (1968). *An Introduction to the Philosophy of Education,* London: University Tutorial Press.

3. Douglas, J.W. B. (1964). *The Home and the School,* London: Mac gibbon and Kee.

4. Janodaya Sajeewana Kendraya. (2003). *Education on Child Rights in SriLanka. Human rights education in Asian schools volume vi.* Asia-pacific human rights information centre.

5. Ministry of Education. (2017). School Census

6. UNICEF, (2016). *What is HRBAP?.* human rights based approach to programming.

7. அஸ்ரப் ஞாபகார்த்த மனநலப் பிரிவின் அறிக்கை – 2014-2016

8. இலங்கை கல்வி அமைச்சு பாடசாலை புள்ளிவிபரவியல் அறிக்கை – 2017

9. கல்முனை பெண்கள் சிறுவர் பிரிவின் பொலிஸ் அறிக்கை - 2017-2018

10. சாய்ந்தமருது பிரதேச செயலக மகளிர் சிறுவர் பிரிவின் தகவல்கள்

11. பக்கீர் ஜஃபர். ப. கா. (2009). *மாணவரின் வகுப்பறை நடத்தை,* குமரன் புத்தகசாலை, கொழும்பு.

12. புள்ளிவிபரக் கையடக்க நூல். (2011). தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், நிதித்திட்டமிடல் அமைச்சு, கொழும்பு.

13. யுனிசெப் சிறிலங்கா. (2013). *நாடுசார் ஆய்வு: இலங்கையில் பாடசாலைக்கு வெளியிலுள்ள பள்ளிச் சிறார்கள்,* கொழும்பு.

14. https://en.m.wikipedia.org/wiki/educationin srilanka